# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
# Tamil Study Centre Homebush Inc.
PO Box 4032, Homebush, NSW 2140.


## பேச்சுப் போட்டி 2024 ஆண்டு 9

அனைவருக்கும் வணக்கம்

## பெரியோர்களை மதித்தல்

தமிழ்ப்பண்பாடு என்றால் என்ன? தமிழ் மக்களுடைய உணவு, உடை, பழக்க வழக்க மரபுகள் தமிழ்ப் பண்பாடு எனப்படும். நாங்கள் தமிழ் உணவு வகைகளை உண்கிறோம். தமிழ்க் கலாசார உடைகளை உடுக்கிறோம். ஆனால் தமிழர்கள் தொன்று தொட்டுக் கடைப்பிடித்து வருகின்ற சிறந்த பழக்க வழக்கங்களைப் பின்பற்றுகிறோமா?. புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்கின்ற ஒவ்வொரு தமிழ்ப் பிள்ளையும் தம்மைத் தாமே கேட்க வேண்டிய வினா இது. தமிழ் மொழியைக் கற்கின்ற மாணவர்கள் தமிழ் மொழி வழி வந்த பண்பாட்டையும் அறிந்து அதனைப் பின்பற்ற வேண்டும்.

பெரியோர்களை மதித்தல் என்பது தமிழர்களின் பழக்க வழக்கங்களில் தலையானதாக விளங்குகின்றது. பெரியோர்களைப் பெயர் சொல்லி அழைக்காமல் உறவு முறைகளால் அழைக்கும் வழக்கத்தைக் கொண்டவர்கள் நாங்கள். ஒரு சமுதாயத்தின் அங்கங்களாக குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள், முதியவர்கள் விளங்குகின்றார்கள். ஒவ்வொரு நிகழ்வுகளிலும் பெரியவர்களான முதியவர்களுக்குரிய கௌரவத்தைக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு மதிப்பளித்து அவர்களின் மகிழ்ச்சியை உறுதிப்படுத்த வேண்டும். பெரியோர்களின் மனம் நோகாமல் நடக்க வேண்டும். அவர்கள் மீது எப்பொழுதும் அன்பு செலுத்த வேண்டும்.

இன்றைய சிறுவர்கள் நாளைய இளைஞர்கள். இன்றைய இளைஞர்கள் நாளைய முதியவர்கள். இதனை எல்லோரும் மனதில் கொள்ள வேண்டும்.

“காவோலை விழக் குருத்தோலை சிரித்த கதை” ஆகி விடக் கூடாது. ஒரு நாளைக்குக் குருத்தோலையும் காவோலையாக மாறும். அதுபோல சிறுவர்களும் முதியோர்களாக மாறுவார்கள். எனவே நாங்கள் பொரியோர்களைக் கேலி, கிண்டல் செய்யக் கூடாது.

பெரியோர்களை மதிப்போம்! பெருமையோடு வாழ்வோம்!

தமிழ்மொழியைக் கற்போம்! தமிழர்களாக வாழ்வோம்!

நன்றி

வணக்கம்